# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 29, 2020

Weekly E-paper • February 29, 2020




## ஏன் அவர்கள் மீது கோபப்பட்டார்கள்?

• சுப.வீரபாண்டியன்

### பன்னாட்டுப் பெண்கள் தின வரலாறு

சாருமா

### கலவரத்தின் விதை

தலையங்கம்

நூல் அறிமுகம்

### அருந்ததியர் இயக்க வரலாறு

- இக்லாஸ் உசேன்

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 29, 2020 Weekly E-paper • February 29, 2020

# ஏன் அவர்கள் மீது கோபப்பட்டார்கள்?

- சுப.வீரபாண்டியன்

ஏன் அவர்கள் மீது கோபப்பட்டார்கள்?

ஷாஹின் பாக் பகுதியில், கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாகப் போராடிய மக்கள் அமைதியாகத்தானே போராடினார்கள்! ஒரு சிறிய வன்முறை கூட அங்கு நடைபெறவில்லையே! பாகிஸ்தான் வாழ்க என்று முழக்கமிட்டார்களா, இந்தியாவிற்கு எதிராக ஒரு சொல்லையேனும் சொன்னார்களா? இல்லையே! பிறகு ஏன் அவர்கள் மீது ஆர். எஸ். எஸ். இயக்கத்தினரும், பாஜகவினரும் கோபப்பட்டார்கள்?




அதனால்தான் கோபப்பட்டார்கள்! அப்படியெல்லாம் செய்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள்! "பாருங்கள் இவர்கள் தேச விரோதிகள்" என்று சொல்வது அவர்களுக்கு எளிதாக இருந்திருக்கும்.

ஆனால் அவர்கள் அப்படியெல்லாம் செய்யவில்லை. இந்தியா வாழ்க என்று முழக்கமிட்டார்கள்...இந்திய தேசியக் கொடியைக் கையில் ஏந்தினார்கள்....தினமும் இந்திய தேசிய கீதம் பாடினார்கள்! ஒரு சிறு கல்லைக் கூட எடுத்து எவர் மீதும் வீசவில்லை.

அதனால்தான் அவர்கள் மீது கோபப்பட்டார்கள்!

அவர்களின் அமைதி, பொறுமை, ஒற்றுமை, அறவழிப் போராட்டம் ஆகியவை இந்த"தேசபக்தாளை"க் கோபப்பட வைத்துவிட்டது.

சரி போகட்டும், தில்லி சட்டமன்றத் தேர்தலில் பெரும் வெற்றி பெறுவதன் மூலம், இந்துக்கள் வாக்குகள் தங்கள் பக்கம்தான் என்பதை மெய்ப்பித்து விடலாம் என்று காத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் நம்பிய இந்துக்களே அவர்கள் முகத்தில் கரி பூசி விட்டார்கள். தோல்வியிலும் தோல்வி, அப்படியொரு படுதோல்வி!

இது பொறுப்பதில்லை என்று ஆயுதங்களைக் கையில் ஏந்தினார்கள். சி ஏ ஏ ஆதரவுப் போராட்டம் என்ற பெயரில், அறவழியில் போராடிய மக்களைக் காவல்துறையின் முன்னிலையில் அடித்து நொறுக்கினார்கள். பள்ளி வாசல்களில் காவிக் கொடி ஏற்றினார்கள். இஸ்லாமிய சகோதரர்களின் வீடு புகுந்து பொருள்களை நாசம் செய்தார்கள்.

வன்முறையில் இறந்தவர்களின் எண்ணிக்கை இப்போது 42 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனைகளில் இருக்கிறார்கள். சாவு எண்ணிக்கை இன்னும் உயரக்கூடும் என்பதே இன்றைய நிலை!

பசி அடங்கவில்லை. இப்போது சென்னை உள்பட, இந்தியாவின் பிற பகுதிகளை நோக்கியும் படை எடுக்கின்றனர்.

இடையில் நம் நடிகர் ரஜினிகாந்த், தன் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். "மத்திய அரசைக் கண்டிக்கிறேன், வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்றார். எதற்குத் தெரியுமா? "வன்முறையை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கத் தவறியமைக்குக் கண்டிக்கிறேன்" என்றார். நல்லது. ஆனால், வன்முறையில் ஈடுபட்டவர்கள் யார், அதனைத் தூண்டி விட்டவர்கள் யார் என்பன பற்றி அவர் வாயைத் திறக்கவே இல்லை. அங்குதான் இருக்கிறது எஜமான விசுவாசம்!

உச்ச நீதிமன்ற நீதிபதி தீபக் குப்தா, நேற்று மிக நிதானமாக ஒரு கருத்தைக் கூறியுள்ளார். " "பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்கள் நாட்டை ஆள்வது ஜனநாயகத்தின் ஒரு கூறு என்பதை மறுக்க முடியாது. ஆனால் பெரும்பான்மைவாதம் (majoritarianism) நாட்டை ஆள்வது ஜனநாயகத்திற்கு எதிரானது" என்று குறிப்பிட்டுள்ளார். (இன்றோ, நாளையோ அவர் ஏதேனும் ஒரு மூலைக்கு மாற்றல் செய்யப்படலாம்).

'குஜராத் மாடல்' தொடங்கிவிட்டது. நாம் என்ன செய்ய வேண்டும்? அடக்கு முறைகளுக்கு அஞ்சாமல் அறவழியில் போராட வேண்டும். அதனைவிட முதன்மையானது, இஸ்லாமியர்கள் தனித்து விடப்படாமல், மதம், மொழி கடந்து அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும்! இது இஸ்லாமியர்களின் போராட்டமில்லை, ஜனநாயகத்தைக் காக்க நடைபெறும் போராட்டம்!!

வன்முறையாளர்களுக்கு ஒன்று சொல்வோம்!

"இன்றைக்கு ராஜா நீங்கள்!
என்றைக்கும் ராஜா இல்லை.....
காலங்கள் மாறும்
காலத்தின் கூண்டில் நீங்கள்
கைகட்டி நிற்க நேரும்!"

•

# பன்னாட்டுப் பெண்கள் தின வரலாறு

**- சாருமா**

*மானுடச் சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்கள், குழந்தை பெறும் பொறுப்பை இயற்கையின் விதிப்படி ஏற்ற காரணத்தால், ஆண்களுக்கு நிகராகப் பார்க்கப்படாமல் அங்கீகரிக்கப்படாமல் இருந்ததுதான் மானுடச் சமூகத்தின் வரலாறு. தாய் வழிச் சமூகமாக வேட்டையாடி வாழ்ந்த போது இருந்த மரியாதையோ அச்சமோ, நிலைபெற்று இனக்குழுக்களாக வாழும்போது மாறிவிடுகிறது. வரலாறு நெடுகிலும் அங்கீகாரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் பெண்கள் பெரும் போராட்டங்களைத் தனி நபராகவும் கூட்டாகவும் எடுத்துக்கொண்டே வந்திருக்கின்றனர். இப்போது ஏற்பட்டிருக்கும் மாற்றம் எப்படி வந்தது? வரும் வாரம் பெண்கள் நினைவுகூரப் போகும் பெண்கள் நாளின் வரலாறு என்ன?*



இன்றிலிருந்து 120 ஆண்டுகள் பின்னோக்கிப் பார்ப்போம். உலகெங்கும் தொழிற்புரட்சி ஏற்பட்டு, நிலப்பிரபுத்துவம் வீழ்ந்து, முதலாளித்துவம் எழுந்த காலம். மேற்குலக, ஐரோப்பிய நாடுகளுக்குள் போட்டியால் முதல் உலகப் போர் மூளவிருந்த தருணம். ஆண்கள் பெருமளவில் போர்க்களங்களுக்குச் சென்று திரும்ப முடியாமல் நெடுங்காலம் வெளி நாடுகளில் தங்க நேரிட, குடும்பச் சுமைகள் பெண்கள் மீது விழுகின்றன.

பெண்கள் ஆலைகளுக்குப் பணிக்குச் செல்வது இன்றியமையாததாக மாறுகிறது. அவர்கள் கையில் பொருளாதாரம் வந்தாலும், ஆலை முதலாளிகள் வரம்பின்றிச் சுரண்டுவதையும் பாலினப் பாகுபாட்டையும் ஏற்க முடியாமல், முதலாளிகளுக்கு எதிராக அணி திரள்கிறார்கள். 1908 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் சிகாகோ நகர் தொடங்கி, நியுயார்க் வீதிகள்வரை 15000 பெண்கள் பணி நேரக் குறைப்பு, சம ஊதியம், ஓட்டுரிமை ஆகிய கோரிக்கைகளை முன்னிறுத்தி அணிவகுத்துச் செல்கிறார்கள். இதுதான் பெண்கள் வரலாற்றில் முதல் திரட்சி. அமெரிக்காவின் சோசலிசக் கட்சி 1909 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாளை, பெண்கள் தினமாகக் கொண்டாடப் பிரகடனம் விடுக்கிறது. 1910 ஆம் ஆண்டு கோபன்ஹேகன் நகரில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்து கொண்ட இரண்டாவது உழைக்கும் பெண்கள் பன்னாட்டு மாநாட்டில், ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சியின் பெண் தலைவர் க்ளாரா ஜெட்கின், ஆண்டுதோறும் பன்னாட்டு மகளிர் தினத்தைக் கொண்டாடும் திட்டத்தை முன்மொழிய, ஏக மனதாக அது நிறைவேறுகிறது.

1911ஆம் ஆண்டு, முதல் பன்னாட்டுப் பெண்கள் தினத்தை ஒட்டி நடந்த பேரணிகளில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களும் ஆண்களும் கலந்துகொண்டு பெண்களின் ஓட்டுரிமை, பாகுபாடு நீக்கம் ஆகிய கோரிக்கைகளை எழுப்புகிறார்கள். சிறிது நாள்களிலேயே மார்ச் 25ஆம் நாள் நியுயார்க் நகரில் 140 பெண்கள் பணியிடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் தம் இன்னுயிரை இழக்கிறார்கள். இக்கோர நிகழ்வு, அமெரிக்க நாட்டில் தொழிலாளர் நலச் சட்டங்களுக்கும், பெண்களின் உரிமைகளுக்கும், அதிகார அமைப்புகளின் தவிர்க்கமுடியாத பங்களிப்பை உறுதி செய்தது.




1913 வரை, பிப்ரவரி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை பெண்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. கிரிகோரிய நாள்காட்டியில் அது மார்ச் 8 ஆகும். கிரிகோரிய நாள்காட்டியை உலகம் முழுதும் ஏற்றுக்கொண்ட பிறகே மார்ச் 8 க்கு மகளிர் நாள் மாற்றப்பட்டது.

1914 ல் லண்டன் ட்ரஃபால்கர் சதுக்கத்தில் உலகப் போருக்கு எதிராகப் பெண்கள் அணி திரண்டார்கள். 1917 ல் ருசியப் பெண்கள் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்களைப் போரில் இழந்ததை எதிர்த்து, “உணவும் அமைதியும்” வேண்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து 4 நாள்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாத ஜார் மன்னர், அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, ஓட்டுரிமையும் அளித்தார். இதுதான் பெண்கள் ரஷ்யாவில் அடைந்த முதல் வாக்குரிமை. 1920இல் அமெரிக்காவும் அதற்கடுத்த சில ஆண்டுகளில் மற்ற ஐரோப்பிய நாடுகளும் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தன. 1921ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற நீதிக்கட்சி ஆட்சியில் பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.

ஐ.நா மன்றம் முதன் முதலாக 1975 ஆம் ஆண்டு தான் பன்னாட்டு மகளிர் நாளை அங்கீகரித்தது. 1996 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை மையமாக வைத்துக் கொண்டாட்டங்களை முன்னெடுக்க அழைக்கிறது. இந்த ஆண்டு “generation equality” “சமத்துவத்தின் தலைமுறை”என்ற கருப்பொருளில் கொண்டாட்டங்கள் முன் னெடுக்கப்படுகின்றன.

பெண்கள் முன்னெடுத்த பணி நேரக் குறைப்பிற்கான போராட்டங்களே ஆண்களும் எட்டு மணி நேர வேலை நேரத்தை இன்று உலகெங்கும் அனுபவிக்கக் காரணமானவை. பெண்களுக்கான சமத்துவமும், அங்கீகாரமும் அவர்களுக்கு மட்டுமன்றி மொத்த மானுடத்திற்கே நன்மை பயக்கும் என்று சான்று பகரும் நாளே பன்னாட்டு மகளிர் நாள். ●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com


மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

ஆரியத்தால் வீழ்ந்தோம்! திராவிடத்தால் எழுந்தோம்! தமிழியத்தால் வெல்வோம்!




ஒரே கேள்வியில் உடைபடும்
## ஜெய் ஸ்ரீராம்
## இராமன் தவம்செய்த சம்பூகன் தலையை வெட்டிக் கொன்றதேன்?



**இந்தக் கேள்விக்கான பதிலைத் தெரிந்து கொண்டால் இன்றைய அரசியலின் மையப்புள்ளியை புரிந்து கொள்ளலாம்...**

இராமன் ஆட்சியில், பார்ப்பனர் ஒருவர் தன் இறந்து போன மகனின் உடலை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வருகிறார். இராமன் ஏதோ மகாபாவத்தை செய்திருக்க வேண்டும், அதனால் தான் தன் மகனுக்கு சிறுவயதில் அகால மரணம் ஏற்பட்டது என்று முறையிடுகிறார்.

இராமன் அமைச்சர்களையும், மற்றவர்களையும் அழைத்துப் பேசுகிறார். அதில் நாரதர் என்பவர், பார்ப்பனர்களும், சத்திரியர்களும் மட்டும் தான் தவம் செய்யலாம் என்பது தர்மம், ஆனால் தற்போது யாரோ ஒரு சூத்திரன் தர்மத்தை மீறி தவம் செய்கிறான். அதனால்தான் அச்சிறுவன் இறந்த விட்டான் என்று கூறுகிறார்.

உடனே இராமன் தேடிச்செல்கிறான். காட்டில் சம்பூகர் என்பவர் தவம் செய்து கொண்டிருக்கிறார். நீர் எந்த வர்ணத்தைச் சார்ந்தவன் என்று கேட்கிறான். சம்பூகன் நான் சூத்திரன் என்கிறான். உடனே, இராமன் எதையும் விசாரிக்காமல் தன் வாளை எடுத்து தவம் செய்த சம்பூகனின் தலையை வெட்டிக் கொன்று விடுகிறான்.

இன்றைய வழக்கப்படி அந்தப் பார்ப்பனர், இராமர், சம்பூகர் எல்லோருமே இந்துக்கள்தான். ஆனால் ஒரு இந்துவின் (பார்ப்பனர்) தூண்டுதலினால், இன்னொரு இந்து (இராமர்) மூன்றாவது இந்துவை (சம்பூகர்) கொலை செய்கிறார். மேலும் இராமனால் கொல்லப்பட்ட இராவணன், வாலி, கும்பகருணன், இந்திரசித்து அனைவரும் இன்றைய வழக்கப்படி இந்துக்களே. மேலும் யுத்த காண்டத்தில் உள்ள " சேது பந்தன சருக்கத்தில் " தீவுகளில் வாழும் பழங்குடி மக்கள் பலரையும் இராமன் அம்பெய்தி கொன்று விடுகிறான்.

இப்படி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் எதிரியாக இருந்துள்ளது ராமராஜ்யம். எனவே, ராமராஜ்யம் என்பது பார்ப்பன ராஜ்யம்தான். ஜெய் ஸ்ரீராம் என்பது வெறும் ஆன்மீகப் பரப்புரை அன்று. அது ஓர் அரசியல் முழக்கம்.

இராமன் தன் நாட்டை வருணாசிரமத் தர்மப்படியே ஆண்டு வந்தான். இது "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற திருக்குறளின் அறநெறிக்கு எதிரானதாகும்.

ஆதாரம் :
* வால்மீகி இராமாயணத்தின் உத்திர காண்டத்தில் 73லிருந்து 76 வரையிலான சருக்கங்கள்.
* காளிதாசர் எழுதிய " ரகுவம்சம் "
* பாபாசாகேப் அம்பேத்கர் எழுதிய இராமன் கிருஷ்ணன் புதிர்கள் - தொகுதி - 8 பக்கம் 462, 463, 464.
* பேரா.சுபவீ எழுதியுள்ள " இதுதான் ராமராஜ்யம் " என்ற நூலைப் படியுங்கள்.



நன்கொடை தாரீர்!

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை, திண்டுக்கல்**

## கருஞ்சட்டைப் பதிப்பகம்

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கலவரத்தின் விதை



H Raja @HRajaBJP · Feb 25
கடந்த 2 நாட்களாக டில்லியில் நடப்பது வண்ணாரப்பேட்டையில், தமிழகத்தில் ஏற்படலாம். வண்ணாரப்பேட்டையிலும் முஸ்லீம் பெண்கள் காவல்துறையினர் மீது கற்களையும் செருப்புக் களையும் வீசினார்கள் என்று சட்டமன்றத்தில் கூறியுள்ளார். ஆயுதங்கள் வருமுன் இவர்கள் அங்கிருந்து அப்புறப் படுத்தப்பட வேண்டும்
604 308 1.6K

அமைதியாக இருக்கும் தமிழ்நாட்டை டெல்லி ஷாஹின் பாக்காக ஆக்கப் பார்க்கிறார்கள் ஆர்.எஸ்.எஸ் - பாஜகவைச் சேர்ந்த சங்கிகள் என்பதற்குச் சான்று மேலே இருக்கும் ட்விட்டர் பதிவு.

குடியுரிமைச் திருத்தச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியதன் பின், அதனால் மக்களுக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை உணர்ந்த மக்கள் அச்சட்டத்திற்கு எதிராக, அமைதியாகப் போராடிவருகிறார்கள்.

போராட்டம் மக்களின் உரிமை.

தமிழகத்தில் மதத்தின் அடிப்படையில் இதுவரை கலகங்கள் வெடித்தது இல்லை.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்கள் பல்வேறு போராட்டங்களை அமைதியாகத்தான் நடத்தி இருக்கிறார்கள். இன்று அதே வழியில்தான் தமிழக மக்களும் தங்கள் உரிமைக்காகப் போராடி வருகிறார்கள்.

அமைதிப் பூங்காவாக இருக்கும் தமிழகத்தை, அமைதியற்ற கலவர பூமியாக மாற்றிட மதத்தை அடிப்படையாக வைத்துப் பேசி வருகிறார்கள் சங் பரிவாரங்கள்.

அரசின் குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து மக்களும், எதிர்க்கட்சிகளும் போராடுவது இயல்பு.

ஆனால், ஆளும் அரசின் சட்டத்தை, ஆளும் கட்சியே வேண்டும் என்று சொல்லிப் போராடுவது எந்த வகையில் சரியாகும்?

இந்த நடவடிக்கை டெல்லி ஷாஹின் பாக் பகுதியில் நடந்ததைப் போலத் தமிழ்நாட்டிலும் நடத்துவதற்கான அறிகுறியாகத் தெரிகிறது.

எச்.ராஜா சமூக விரோதக் கருத்துகளைச் சொல்வதும் அதனால் நீதிமன்றத்துக்குப் போகும் நிலை ஏற்பட்டால் மன்னிப்பு கேட்பதும் வழக்கமாக உள்ளது.

இப்பொழுது தமிழ்நாட்டைக் கலவர பூமியாக்க எச்.ராஜாவின் பேச்சு தூண்டுகோலாக இருக்கிறது.

மோடியை விமர்சித்ததற்காக விரைந்து சென்று நெல்லைக் கண்ணனை கைது செய்த எடப்பாடி அரசின் காவல்துறை, எச்.ராஜா, எஸ்.வி.சேகர் போன்றோரைக் கைது செய்யாமல் இருப்பதுஅவர்களின் கோழைத்தனத்தைக் காட்டுகிறது.

சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைதியாகப் போராடிவருகிறார்கள் மக்கள்.


இங்கு வன்முறை ஏற்பட்டால் அதற்குக் காரணம் எச்.ராஜாவின் பேச்சாகத்தான் இருக்கும்.

# அருந்ததியர் இயக்க வரலாறு

**நூல் அறிமுகம் - இக்லாஸ் உசேன்**

உலகெங்கிலும் மனிதன் நிர்வாணமாகத்தான் பிறக்கிறான். இந்தியாவில் மட்டுமே உயர் சாதியாய், தாழ்ந்த சாதியாய்ப் பிறக்கிறான். இந்திய சாதிய ஏற்றத்தாழ்வு இருள் நிறைந்த திசையற்ற பாதைக்கு இந்நாட்டை இட்டுச் செல்கிறது. காலநிலையில் கூட மாற்றம் ஏற்படுகிறது. சாதி அடுக்குகளில் ஈராயிரம் ஆண்டுகளாக எந்த மாற்றமும் நிகழாமல் நீடிக்கிறது.

இனத்தூய்மை காப்பதுதான் சாதியின் குறிக்கோள் என்று இனவாதம் பேசுபவர்கள் கருதுகின்றார்கள். ஆனால் சாதி, அதே இனத்தைச் சார்ந்தவர்களை, ஒரு சாராரைத் தூய்மையற்றவர்களாக மாற்றி வைத்த கொடுமையும் இங்கு நீடிக்கிறது.




சமமற்ற சமூகத்தைக் கட்டமைப்பதில் சாதி முக்கியப் பங்காற்றுகிறது. சமமற்ற சமூகத்தைச் சமூகநீதிச் சமூகமாக மாற்றப் போராடிய அருந்ததியர் இயக்க வரலாறே இந்நூல்.

அருந்ததியர்களைத் தமிழர்களே அல்ல, வந்தேறிகள் என்று வாய்கூசாமல் பொய் பேசுகிறார்கள் வீணர்கள். கூகுள், விக்கிபீடியா கூட அருந்ததியர்கள் அந்நியர்கள் என்றே விவரிக்கின்றன. அவ்வெறுப்புக் கருத்துகளைத் தக்க ஆதாரங்களைக் கொண்டு தகர்த்தெறிகிறார் ஆசிரியர் எழில் இளங்கோவன்.

1920ஆம் ஆண்டு தொடங்கி அருந்ததியர் இயக்கத்தின் செயல்பாடுகளை இந்நூல் விவரிக்கிறது. அருந்ததியர் மகாஜன சபை, சென்னை அருந்ததியர் சங்கம் முதன்முதலில் தொடங்கப்பட்டது, கல்வி உரிமை, வாழ்வாதாரம், சமூகநீதியைக் கொள்கையாகக் கொண்டே அருந்ததியர்கள் இயக்கம் செயல்பட்டது, அருந்ததிய மக்களிடையே மண்டிக்கிடந்த தாழ்வுமனப்பான்மையை நீக்கி பகுத்தறிவுச் சிந்தனையையும் வளர்த்தது எனப் பல செய்திகளை இந்நூலில் காணலாம்.

எல்.சி குருசாமி அருந்ததியர் சங்கத் தலைவராக மட்டும் இல்லாமல் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கான சமூகநீதியை நிலைநாட்ட எல்.சி.குருசாமியின் பேச்சு நீதிக்கட்சிக்குத் துணைநின்றது.

கவுதம புத்தரின் இனமாகிய சாக்கியர் என்பதே பின்னாளில் சக்கிலியர் ஆனது என்கிற எல்.சி குருசாமியின் வரலாற்று ஆய்வுப் பார்வை அம்பேத்கரை நினைவுபடுத்துகிறது.

கடல்கடந்த இலங்கையிலும் அருந்ததியர் இயக்கம் இயங்கியது. பெ.கா.இளஞ்செழியன், பெரு எழிலழகன் (இந்நூல் ஆசிரியரின் தந்தை) பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கருத்தியலை எப்படி இலங்கையில் நடைமுறைப்படுத்தினார்கள், இலங்கைப் பொதுவுடைமை இயக்கத்தின் போராட்டமும் அதற்கு அருந்ததியர் இயக்கத்தின் ஒத்துழைப்பும். அகில இலங்கை அருந்ததியர் சங்கச் செயல்பாடும் அதன் தலைவராக இருந்த மூ.வேலாயுதம் பணிகளும் எனப் பல செய்திகள் ஆச்சரியமூட்டுகின்றன.

இலங்கையில் இந்தியாவில் , தமிழக அளவில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரிடமும் வேலாயுதம் அவர்களுக்கு நல்ல அறிமுகம் இருந்திருக்கிறது. அதை அருந்ததியர் சமூக மக்களின் வறுமையை விரட்ட உரிமையை மீட்கப் பயன்படுத்தியும் இருக்கிறார்.

அருந்ததியர் இயக்கச் செயல்பாடுகள் சென்னை மட்டுமல்லாமல் தமிழகம் முழுக்க விரிவடைகின்றன. தூத்துக்குடி, மதுரை, நாமக்கல், சேலம், கோவையில் வீரியமாகச் செயல்படுகிறது. 1950க்கு பிறகு ஒதுக்கப்பட்ட சமூகத்தில் புதிய புதிய போராளிகளும் உருவாகிறார்கள்.

இவை அனைத்துமே திராவிட சமூகநீதிக் கருத்தியலை, பெரியாரிய, அம்பேத்கரியச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்கின்றன.

பாபாசாகேப் அம்பேத்கருக்குத் தமிழகத்தில் முதன்முதலில் சிலை அமைத்ததும் அருந்ததியர் இயக்கமே.

1938இல் இராஜாஜி ஆட்சியில் 2500க்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. ஏற்கனவே சமூக, பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல் கல்வியிலும் பின்தங்கிய அருந்ததியர்கள் தங்களுக்கென முதல் பள்ளிக்கூடம் அமைத்தது 1953 ஆம் ஆண்டு.

தூத்துக்குடி நகரசுத்தித் தொழிலாளர் சங்கம் உழைப்பின் உரிமையைக் கேட்டுப் போராடியது. சமூக, சமஉரிமைப் போராட்டமாக 1959இல் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கக்கனுக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டும் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. அதையொட்டி காமராஜர் ஆட்சியில் ஆட்சி அதிகாரத்தில் பொறுப்பில் அருந்ததியர்கள் பங்குபெற்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அருந்ததியருக்குத் தனி உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அருந்ததியர் சங்கம் சார்பாக சேலம், ராசிபுரம் பகுதியில் நடந்த மாநாடுகள், தேசிய தாழ்த்தப்பட்டோர் இயக்கம் நடத்திய சென்னிமலை, கோவை மாநாடுகள், டாஸ்க்கோ அமைப்பு நடத்திய ஈரோடு மாநாடு, தமிழ்நாடு அருந்ததியர் முன்னணி நடத்திய தீவுத்திடல் மாநாடு.... இப்படி ஏராளமான அருந்ததியர் இயக்க மாநாடுகள் வரலாற்றில் மைல் கற்களாக இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஏதுமற்ற சமூகம் என்று ஊடகத்தால், வெகுமக்களால் புறக்கணிக்கப்பட்ட சமூகத்தின் அரசியல் பயண வரலாறாக இந்நூல் இருக்கிறது. இதற்காக எழில்.இளங்கோவன் பல ஆண்டுகள் பயணப்பட்டு ஆதாரங்களை, வாக்குமூலங்களைச் சேகரித்துப் புத்தகமாக நமக்குக் கொடுத்துள்ளார்.

எளியநடையில் ஆதாரங்களையும் அனுமானத்தையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இந்நூல் பேசுகிறது.

அருந்ததியர்களின் எண்ணங்களையும் எதிர்ப்பார்ப்பையும் வெகு மக்களிடம் கொண்டு சேர்க்க இந்தப் புத்தகம் நிச்சயம் துணை நிற்கும்.

●

**அருந்ததியர் இயக்க வரலாறு**
**ஆசிரியர் : எழில்.இளங்கோவன்**
**வெளியீடு: கருஞ்சட்டைப் பதிப்பகம்**
**விலை: ரூ.120**
**தொடர்புக்கு: 9940407468, 044 247226408**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,